இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 192 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 09 – வெள்ளிக்கிழமை 21 பிப்ரவரி 2025 – வெளியீர் 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 192 : Thiruvalluvar Year - 2056 - Maasi 09 - Friday 21 February 2025 - Dak 24 Pages ₹ 5.00

## கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டு மாணவர்கள் - ஆசிரியர்களின் நலன் கருதி

# ரூ. 2,152 கோடி கல்வி நிதியை உடனடியாக விடுவித்திடுவீர்!

## பிரதமர் மோடிக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, பிப்.21-**

**தமிழ்நாட்டில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி, 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின்கீழ் ரூ. 2,152 கோடி நிதியினை உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலும், இலட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதியும், தமிழ்நாட்டிற்கு 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின்கீழ் வரவேண்டிய நிதியினை ஒன்றிய அரசு உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.2.2025) கடிதம் எழுதியுள்ளார்.

**ஒன்றிய கல்வித் துறை அமைச்சரால் தமிழ்நாட்டு மக்கள் கொந்தளிப்பு!**

அக்கடிதத்தில், "தேசிய கல்விக் கொள்கை2020ஐ முழுமையாக அமல்படுத்தி, மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை, தமிழ்நாட்டிற்கான 'சமக்ர சிக்ஷா' (Samagra Shiksha) திட்டத்தின்கீழ் நிதி விடுவிக்கப்பட மாட்டாது" என்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் சமீபத்தில் தெரிவித்திருப்பது குறித்து தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இது தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெருத்த கவலையையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் கல்வி மற்றும் சமூகச் சூழலில், இருமொழிக் கொள்கையானது நீண்ட காலமாக ஆழமாக வேரூன்றியுள்ளதாகவும், அதனைப் பின்பற்றுவதில் தமிழ்நாடு எப்பொழுதும் உறுதியாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், அலுவல் மொழிகள் விதி, 1976ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, "அலுவல் மொழிச் சட்டம், 1963"ஐச் செயல்படுத்துவதில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**இரு மொழிக் கொள்கை மாற்றம் எங்களுக்கு பயனளிக்காது!**

நவோதயா வித்யாலயா போன்ற ஒன்றிய அரசுப் பள்ளிகள் மும்மொழிக் கொள்கையைப் பின்பற்றுவதால் தான், தமிழ்நாட்டில் அவை நிறுவப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த இரு மொழிக் கொள்கை மற்றும் சமூக நீதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட முற்போக்குக் கொள்கைகளின் காரணமாக, கடந்த அரை நூற்றாண்டில் தமிழ்நாடு அடைந்துள்ள மகத்தான முன்னேற்றங்கள் மற்றும் அதற்கு வித்திடும் முன்முயற்சிகளைக் காண முடிகிறது எனவும், எங்கள் இருமொழிக் கொள்கையில் எந்தவொரு மாற்றமும் கொண்டுவர உத்தேசிப்பது தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பெரிய அளவில் பயனளிக்காது என்பதை மேலே உள்ளவை தெளிவாக எடுத்துக் காட்டுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

> **"தேசிய கல்விக் கொள்கை 2020ஐ முழுமையாக அமல்படுத்தி, மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை, தமிழ்நாட்டிற்கான 'சமக்ர சிக்ஷா' (Samagra Shiksha) திட்டத்தின்கீழ் நிதி விடுவிக்கப்பட மாட்டாது" என்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் சமீபத்தில் தெரிவித்திருப்பது குறித்து தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இது தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெருத்த கவலையையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.**

இதுதவிர, தேசியக் கல்விக் கொள்கை2020ல் குறிப்பிடப்பட்டுள்ள சில விதிகள் குறித்து 27.08.2024 நாளிட்ட தனது கடிதத்தின் மூலம் தமிழ்நாடு அரசின் ஆழ்ந்த கவலைகள் முறையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதோடு, 27.09.2024 அன்று தனிப்பட்ட முறையில் விரிவான கோரிக்கை மனுவாக இந்தியப் பிரதமர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இருப்பினும், பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டும், "சமக்ரா சிக்ஷா" திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படாமல் உள்ளதாக கவலையோடு தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**கூட்டாட்சித் தத்துவத்தை அப்பட்டமாக மீறும் செயல்!**

ஒன்றிய அரசின் இரண்டு வெவ்வேறு திட்டங்களான "சமக்ர சிக்ஷா" திட்டத்தையும், தேசிய கல்விக் கொள்கையைப் பிரதிபலிக்கும் பி.எம்.ஸ்ரீ. (PM SHRI) திட்டத்தையும் ஒன்றாகப் பொருத்திப் பார்ப்பது என்பது அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என்பதைத் தான் மீண்டும் வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போது ஒரு மாநிலத்தில், அங்குள்ள காலச் சூழலுக்கேற்ப பின்பற்றப்பட்டு வரும் கொள்கைகளுக்கு எதிராக, அந்த மாநிலத்தைக் கட்டாயப்படுத்துவதற்கு, நிதி வழங்கும் விவகாரங்களில் ஒன்றிய அரசு அழுத்தம் தரும் இத்தகைய முயற்சி, கூட்டாட்சித் தத்துவத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும் என்று தெரிவித்துள்ளதோடு, குறிப்பிட்ட தேவைகளின் அடிப்படையில் தங்களது கல்விக் கொள்கைகளை வடிவமைக்கும் மாநிலங்களின் உரிமைகளை பெருமளவில் பாதிக்கும் என்றும் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தின் கீழ் நிதி விடுவிக்கப்படாததால், ஆசிரியர்கள் சம்பளம், மாணவர்களுக்கான நலத் திட்டங்களை உள்ளடக்கிய கல்வி முன்னெடுப்பு முயற்சிகள், கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் பயிலும் வறிய நிலையில் வாழும் மாணவர்களுக்கான கல்வித் தொகையைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கான போக்குவரத்து போன்றவற்றிற்கான பல முக்கிய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில், இலட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி, இந்த விஷயத்தில் இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு நிதி விடுவிக்கப்படாமல் உள்ளதால் ஏற்பட்டுள்ள வருந்தத்தக்க சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தேசிய கல்விக் கொள்கை2020ஐ செயல்படுத்துவதோடு 'சமக்ர சிக்ஷா' திட்டத்தைப் பொருத்திப் பார்க்காமல், 2024-25 ஆம் நிதியாண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய ரூ.2,152 கோடி நிதியினை உடனடியாக விடுவிக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இப்பொருண்மையின் தீவிரத்தை உணர்ந்து, தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.2.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 92 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள், 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 4 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, 10 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள 6000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 6 கூடுதல் வட்ட செயல்முறை கிடங்குகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ரூ.92.45 கோடி செலவில் 6 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள் -

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் - நவீன நெல் சேமிப்புத் தளங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து - அடிக்கல் நாட்டினார்!

சென்னை, பிப்.21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.2.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 92 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள், 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 4 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, 10 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள 6000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 6 கூடுதல் வட்ட செயல்முறை கிடங்குகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களை சேமித்து வைத்திடும் நோக்குடன் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்பு கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை நவீன முறையில் சேமித்து வைத்திடவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 155.28 கோடி ரூபாய் செலவில் 84,000 மெ.டன். கொள்ளளவு கொண்ட வட்ட செயல்முறை கிடங்குகள், 39.37 கோடி ரூபாய் செலவில் 63 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 236.09 கோடி ரூபாய் செலவில் 2,82,750 மெ.டன். கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் ஆகியவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.**

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பொது விநியோக திட்டத்தினை மேலும் செம்மையாக செயல்படுத்திட ஏதுவாக புதியதாக உருவாக்கப்பட்டுள்ள வட்டங்களில் புதிய வட்ட செயல்முறை கிடங்குகளை நிறுவவும், வட்ட செயல்முறை கிடங்குகள் மற்றும் உணவு தானிய சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவினை மேம்படுத்தும் வகையிலும் புதிய கிடங்குகள் கட்ட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்திற்கு எதிராக மனு!

### உச்ச நீதிமன்றத்தில் திரிணாமுல் காங்கிரஸ் தாக்கல்!

*புதுடெல்லி, பிப்.21-*

*தேர்தல் ஆணையர்கள் நியமன சட்டத்துக்கு எதிராக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. மகுவா மொய்த்ரா உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், நியாமாகவும், நேர்மையாகவும் தேர்தலை நடத்தும் தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தை பறிக்கும் வகையில் திட்டமிட்டு ஒன்றிய அரசு இச்சட்டத்தை கொண்டு வந்துள்ளதாகவும், இந்த சட்டம் அரசியலமைப்பின் அடிப்படை நோக்கங்களை மீறுவதாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்த சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணையர்களை நியமிப்பது, தேர்தல் ஆணையத்தின் மீது அரசு நிர்வாகம் ஆதிக்கம் செலுத்த இடம் அளிப்பதாகவும், கட்சி பாகுபாடற்ற நியாமான தேர்தல் நடைமுறையை சிதைப்பதாக உள்ளதாகவும் இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நாடாளுமன்றத்தில் உரிய விவாதங்கள் இல்லாமல் தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும், உச்ச நீதிமன்ற தீர்ப்புபடி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை தேர்தல் ஆணையர்கள் தேர்வுக் குழுவில் சேர்க்க உத்தரவிட வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.*

*தேர்தல் ஆணையர்கள் நியமன சட்டத்துக்கு எதிராக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களுடன் மகுவா மொய்த்ரா தாக்கல் செய்துள்ள மனுவும் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*